அ.வ எண்68/2013 சொரூபராணி (வாசா1) தேதி:27.02.2024

பிரதிவாதி குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது அம்மா மதுரைலிருந்து கோவில்பட்டிக்கு வரும் வழியில் இறந்துவிட்டார். எனது அம்மாவின் இறுதிசடங்கு கோவில்பட்டி பழையபோஸ்ட் ஆபீஸ்தெரு கதவு எண்.73ல் நடந்தது என்றால் சரிதான். நாடார்உறவு முறை சங்கத்தில் மேற்படி இறப்பை தெரிவித்துதான் சடங்குகள் செய்தோம் என்றால்சரிதான். மேற்படி நாடார்உறவுமுறை சங்கம் இதுசம்பந்தமாக பணம் செலுத்தப்பட்டபின்பு ரசீது வழங்குவார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இறப்பிற்கு உடலைஎடுத்துசெல்ல மேற்படி நாடார்உறவுமுறை சங்கத்திலிருந்து இறுதியாத்திரைசெல்லும் வாகனம் வரும் என்றுசொன்னால் சரிதான்.மேற்படி வாகனத்திற்கு பணம் செலுத்தவேண்டும் என்றுசென்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி எனது அம்மாவின் இறுதியாத்திரை நடைமுறைகளை நான் ஏற்பாடுசெய்யவில்லை ஆனால் கலந்துகொண்டேன். மேற்படி ஏற்பாடுகளை 1ம்பிரதிவாதி எனது அண்ணன் தான் ஏற்பாடு செய்தார் என்றுசொன்னால் சரிதான். மேற்படி இறுதியாத்திரை செலவுகளை 1ம்பிரதிவாதிதான் செய்தார் என்றுசொன்னால் அதுபற்றி எனக்குதெரியாது. எனது அம்மாவின் இறப்புசான்றிதழில் அவரது இறப்பு கோவில்பட்டியில் நடைபெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அம்மாவின் இறுதியாத்திரை செலவுகளை நான் செய்யவில்லை. எனது அம்மாவிற்கு வங்கி பாஸ்புத்தகம் இருந்ததா என்று எனக்கு தெரியாது. எனது அப்பா உயிரோடு இருந்தகாலத்தில் எனது அம்மா செலவிற்கு எனது அப்பாவிடம் பணம் பெறுவார் என்றுசொன்னால் எனது அம்மாவிடம் எப்போதும் பணம்இருக்கும். எனது அம்மா எதைசெய்தாலும் எனது அப்பாவிடம் கேட்டுவிட்டுதான் செய்வார் என்றால் சரிதான். எனது அப்பா இறந்தபிறகு எனது அம்மா மூத்தமகன் என்ற முறையில் 1ம்பிரதிவாதியிடம் கேட்டுதான் எல்லாவிசயங்களையும் செய்வார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கடிதம் நான்எழுதிய கடிதம் ஆகும். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.5 கடிதத்தில் நான் பணம்கேட்டு அனுப்பியுள்ளேன் என்றுசொன்னால் சரிதான். மேற்படி கடிதத்தின்படி நான் பணம்பெற்றுக்கொண்டேன் என்றுசொன்னால் சரிதான். மேற்படி பணத்தை எனது அம்மா 1ம்பிரதிவாதியிடம் பெற்று என்னிடம்கொடுத்தார் என்றால் சரியல்ல.

எனது அம்மாவின் பணத்தைதான் கொடுத்தார். எனது அம்மாவின் இறப்பு சான்றிதழை நான் விண்ணபித்து பெற்றுகொண்டேன் என்றால்சரிதான். எனது அம்மாவின் இறப்புசான்றிதழ் நான் 1ம்பிரதிவாதிபெற்றபிறகு பெற்றுக்கொண்டேன் என்றுசொன்னால் வட்டாட்சியர் அலுவலகத்தில் கேட்டார்கள் அதனால் பெற்றேன். வாரீசு சான்றிதழ் வா.சா.ஆ.14 நான் தனியாகத்தான் பெற்றுக்கொண்டேன் என்றால்சரிதான். வாரீசு சான்றிதழ் மற்றும் இறப்புசான்றிதழ், உயில் ஆகியவற்றின் அடிப்படையில் நான் வட்டாட்சியரிடம் மனு தாக்கல் செய்தேன் என்றுசொன்னால் சரிதான். மேற்படி மனுவில் 1ம்பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பபடாமல் எனது பெயருக்கு கூட்டுபட்டா வழங்கப்பட்டது என்றுசொன்னால் மேற்படி மனுவிற்கு 1ம்பிரதிவாதிஎதிர்ப்பு தெரிவித்தார். வா.சா.ஆ.9 உத்தரவில் 1ம்பிரதிவாதிக்கு அறிவிப்புகொடுத்ததாக துலங்காது என்றுசொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம்பிரதிவாதி மேற்படி உத்தரவிற்கு கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்தார் என்றால்சரிதான். மேற்படி மேல்முறையீடு எனக்கு சாதகமாக முடிக்கப்பட்டது. பின்னிட்டு 1ம்பிரதிவாதி மாவட்ட வருவாய் அலுவலர் முன்பு மேல்முறையீடு தாக்கல் செய்தார் என்றால்சரிதான். மேற்படி மாவட்ட வருவாய் அலுவலர் வா.சா.ஆ.11 உத்தரவு பிறப்பித்தார் என்றால்சரிதான். மேற்படி மேல்முறையீட்டில் மாவட்ட வருவாய் அலுவலர் உயிலில் பிரச்சனைகுரிய கையெழுத்தை பரிசோதனைக்கு அனுப்பினார் என்றுசொன்னால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு சென்று பரிகாரம்தேடும்படி சொன்னார். காவல்துறை துணைகண்காணிப்பாளர்சொத்தை பிரித்துகொடுக்கும்படி நான் மனுகொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி மனு கிழக்குகாவல் நிலையம் கோவில்பட்டி விசாரணைக்கு அனுப்பப்பட்டது என்றால்சரியல்ல. மேற்படி புகார்விசாரணையில் சொத்தை சரிசமமாக பிரித்துகொள்ளவேண்டும் என்றுசொன்னார்கள் என்றால் சரியல்ல. இலவசசட்ட உதவிமையத்தில் நான் புகார்கொடுத்தேன் என்றுசொன்னால் கேவியட் தாக்கல் செய்தார்கள் அதனால் நான் என்னவென்று கேட்டேன். வழக்கைதாக்கல் செய்வதற்கு என்னிடம்போதுமான நிதிவசதி இல்லையென்று வறியவர் வழக்காக தாக்கல் செய்ய அனுமதிகேட்டேன் என்றும் அது தள்ளுபடிசெய்யப்பட்டது என்றால்சரியல்ல. 1 மற்றும் 6 பிரதிவாதிகள் அவர்களது அம்மா எழுதிவைத்த உயிலை அடிப்படையாக கொண்டு மாவட்ட வருவாய்

அலுவலரிடம் மேல்முறையீடு தாக்கல்செய்தார் என்றால் அவர்கள் தனியாக உயில் வைத்துள்ளார்கள். மேற்படிஉயிலை ஆட்சேபணை செய்து நான் எதிர்உரை தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகள் வழக்காடும் உயிலை நான் பார்த்தது கிடையாது. மேற்படி உயில் இருப்பதாக என்னிடம்சொன்னார்கள். மேற்படி உயிலை எனக்கு நன்றாகதெரியும் என்றும் அதனால்தான் மேற்படி உயிலை மாவட்ட வருவாய் அலுவலர்முன்பு ஆட்சேபணை செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது அம்மா பிரதிவாதிகளுக்கு எழுதிவைத்த கடைசி உயிலை தெரிந்துகொண்டுதான் நான் புகார்மனுக்கள் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 2000 வருடத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கட்டவாக்கம் என்ற ஊரில் நான் கடைவைத்து நடத்தேன் வந்தேன். அங்கு 4 வருடங்கள் வசித்து வந்தேன். மேற்படி ஊரில் எனது கணவர் கேபிள்டிவி நடத்திவந்தார் என்றுசொன்னால் சரிதான். மேற்படி தொழிலுக்காக எனது அம்மாவின் கடன்பெற்றேன் என்றுசொன்னால் கடன் பெறவில்லை. எனது அம்மா எனக்கு உதவுசெய்தார். எனது அம்மாவிற்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றும் 1ம்பிரதிவாதியின் பணத்தை எனக்கு கொடுத்துள்ளார் என்றுசொன்னால் சரியல்ல. மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவுபிறப்பித்த பிறகு எனது அக்கா சொர்ணவிஜயா மூலமாக சொத்துக்களை எல்லோரும் பிரித்துகொள்ள சமரசம் பேசினோம் என்றுசொன்னால் சரியல்ல. மேற்படி சமரசத்தில் நாங்கள் 5 பேரும்சேர்ந்து சமரசமாக ஆவணம் எழுதிகொண்டோம் என்றால் சரியல்ல. பின்னிட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்வதற்கு ஆவணங்கள் தயார்செய்யப்பட்டது என்றும், ஆனால் நான் பதிவுசெய்யவில்லை என்றும்சொன்னால் சரியல்ல. மேற்படி பதிவுசெய்யப்படாத ஆவணங்களை குறியீடுசெய்வதற்கு அசல்வழக்கு 67/2013 ல் இந்த 1ம்பிரதிவாதி மனுதாக்கல் செய்து அதுதள்ளுபடியானது என்றுசொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி உத்தரவுக்கு எதிராக மாண்புமிகு மாவட்ட உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனுதாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடிசெய்யப்பட்டது என்றுசொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவாசொத்து சம்பந்தமாக ஏற்கனவே எனது அம்மா 1, 6 பிரதிவாதிகளுக்கு உயில்எழுதிவைத்துள்ள காரணத்தினால் நான் இந்த வழக்கில் பாகப்பிரிவினை கோரமுடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிர்வழக்குரைக்கு பதில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றுசொன்னால் சரிதான். கதவு எண்.73 கோவில்பட்டி

பழைய போஸ்ட் ஆபீஸ்தெரு வீடுசம்பந்தமாக அ.வ.எண்.296/2013 பாகப்பிரிவினை கோரி கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் இந்த பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் இருப்பதால் மேற்படி வழக்கை தள்ளுபடிசெய்யகோரி மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனு தள்ளுபடிசெய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவுக்கு எதிராக இந்த நீதிமன்றத்தில் சி.எம்.ஏ 6/2017 நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி அசல்வழக்கு எண்.296/2013 வழக்கை இந்த வழக்கோடு சேர்ந்து நடந்த நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 2 வழக்குகளும் எனது அம்மா எழுதிகொடுத்தாக சொல்லப்பட்ட பொய்உயிலின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் என்றும் எனவே தள்ளுபடிசெய்யப்படவேண்டும் என்றுசொன்னால் சரியல்ல. எனது அம்மாவின் உயிலில் உள்ள கையெழுத்து உண்மையானது எனப்தை நிரூபிக்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மேற்படி கையெழுத்து உண்மையானதுதான். எனது அம்மாவின் கையெழுத்தை காட்டக்கூடிய வேறு ஆவணங்கள் நான்தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி உயிலில் உள்ள கையெழுத்து எனது அம்மாவின் கையெழுத்து இல்லை என்ற காரணத்தினால்தான் மேற்படி கையெழுத்தை நிரூபிக்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றுசொன்னால் சரியல்ல. உயிலில் உள்ள கையெழுத்து குறித்து மாவட்ட வருவாய் அலுவலர் மூலமாக ஏற்கனவே பரிசோதனைக்கு அனுப்பபட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பரிசோதனை அறிக்கையை மாவட்ட வருவாய் அலுவலர் பரிசீலித்து முடிவெடுக்க அவருக்கு அதிகாரம் இல்லை என்றகாரணத்தினால் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார் என்றுசொன்னால் இரண்டு பேரும் சொத்தை கேட்பதால் நீதிமன்றத்திற்கு சென்று பரிகாரம்தேடிக்கொள்ளும்படிசொன்னார். மதுரையில் பதிவுசெய்யப்பட்ட உயில்ஆவணம் சம்பந்தப்பட்ட கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதா என்று எனக்கு தெரியாது. கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் உயில்சம்பந்தமாக நான் ஆவணங்கள்எதுவும் பெறவில்லை. உயில்ஆவணம் உண்மையானது இல்லை என்பதால்தான் மேற்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்காடும் உயில்மோசடியானது என்றும் அதனை நான் நிரூபிக்கவில்லை

என்றுசொன்னால் சரியல்ல.  உயில்சம்பந்தமாக சாட்சிகளை நான் விசாரிக்கதயாராக இருக்கிறேன்.  நான் சொல்லும் உயிலின் அடிப்படையில் எனக்கு எந்தபரிகாரமும் கிடைக்ககூடியதல்ல என்றும், இந்த வழக்கு தள்ளுபடிசெய்யவேண்டும் என்றுசொன்னால் சரியல்ல.  நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் உயில் மோசடியானது என்றும் சொன்னால்சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R.Rathinavel Pandian
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி